அங்கத்தினரே, அரசாங்கம் ஆடுகளை எந்த முறையிலே வளர்க்கிறது, ஆடுகள் இன விருத்திக்காக அரசாங்கம் என்ன முயற்சிகளை மேற்கொள்ளுகின்றது என்பவற்றை விளம்பரப்படுத்துவது போன்ற நல்ல காரியங்களிலே ஈடுபடலாம்.

மேட்டூர் அணையில் மீன் பிடிப்பு.

* 153 வினு : **திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு உணவு, வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மேட்டூர் அணையில் 1968, எப்ரல் முதற்கொண்டு மீன் பிடிப்பது கட்டுப்படுத்தப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : (அ) ஆம்.

(இ) மேட்டூர் நீர்த்தேக்கத்தில் தண்ணீர் அளவு 30 அடிக்குக் குறைவாக இருக்கையில் அங்கு மீன் பிடிப்பதற்குக் கட்டுப்பாடு விதிக்கப்படுகின்றது. தண்ணீர் மட்டம் 15 அடிக்குக் கீழே சென்ருல், யமனேரிக்கெண்டை, கெண்டை, பூனைமீன்கள் (Cat Fish) ஆகியவற்றைப் பாதுகாப்பதற்காக, யமனேரிக் கொண்டை வலைகள் அனைத்தும் நிறுத்தப்படுகின்றன.

சாக்கடை அமைப்புத் திட்டங்கள்.

* 154 வினு : **திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு பொதுச் சுகாதார அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா :

1967-68-ல் எத்தனை நகரங்களில் அரசு சாக்கடைத் திட்டங்களை நிறைவேற்றியுள்ளது ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : திருமங்கலம் நகர பஞ்சாயத்தின் ஒரு பகுதி வடிகால் திட்டம் 1967-68-ல் முடிவடைந்தது. மற்ற இடங்களில் வேலைகள் நடந்துகொண்டிருந்தன.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, மக்கள் தொகை 20,000-க்கு மேற்பட்டிருக்கிற பேரூராட்சிகளில் இந்த சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசு ஏதாவது சிறப்புத் திட்டம் வைத்திருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : சிதம்பரம், மன்ஞர்குடி, கும்பகோணம், தூத்துக்குடி, பெரியகுளம், சாத்தூர், லால்குடி, ஆகிய நகராட்சிமன்றங்களில் இது போன்ற பெரிய திட்டங்களை செயல்படுத்துவதற்காக திட்டங்கள் தீட்டியிருக்கிருர்கள். அதில் கோயம்புத்தூர் முனிசிபாலிடியில் இப்பொழுது வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. சிதம்பரம் முனிசிபாலிடியில் 1968-69-க்குள் முடிவடையும் தருவாயில் இருக்கிறது. உதகமண்டலத்திலும் இது போன்ற ஜலதாரைத் திட்டம் (டிரைனேஜ் சிஸ்டம்) செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் புதிய திட்டங்களாக இவைகளெல்லாம் சேர்க்கப்பட்டிருக்கின்றன. திருச்சிராப்பள்ளி, காஞ்சி, கடலூர், சேலம், திருநெல்வேலி, ஆலந்தூர் ஆகிய இடங்களில் ஜலதாரைத் திட்டங்களைப் பழுது பார்க்கவேண்டும் என்பதற்கான செயற்குறிப்புகள் இங்கே இருக்கின்றன. இருந்தாலும், இப்பொழுது அனைத்தையும் நிறைவேற்றுவதற்கான அளவுக்கு போதுமான நிதி இல்லாத காரணத்தினுல், இவைகளெல்லாம் தாமதப்பட்டு வருகின்றன.

Payment of college fees by Harijan students

* 155 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—